


**30.01.2025**

தலைப்பு செய்திகள்

1. தேசபிதா மகாத்மா காந்தியடிகளின் 77-வது நினைவு தினத்தை ஒட்டி தலைவர்கள் இன்று மலரஞ்சலி செலுத்தினர்.

2. நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் சமூகமாக நடைபெற ஏதுவாக மத்திய அரசு சார்பில் அனைத்துக் கட்சி கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெற்று வருகிறது.

3. தமிழ்நாட்டில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவன ஊழியர்களுக்கு 15 சதவிகிதம் வரை ஊதிய உயர்வு வழங்கி தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது

4. முதுநிலை மருத்துவ படிப்பில் மாணாக்கர் சேர்க்கை தொடர்பாக தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்யும் என்று மாநில அமைச்சர் திரு.மா.சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

5. தாய்லாந்து மாஸ்டர்ஸ் பேட்மிட்டன் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு கிடாம்பி ஸ்ரீகாந்த், சுப்ரமணியன் ஆகியோர் முன்னேறியுள்ளனர்.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖

**மகாத்மா காந்தி நினைவு தினம்**

தேசபிதா மகாத்மா காந்தியடிகளின் 77-வது நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

புதுதில்லி ராஜ்கட்டில், காந்தியடிகளின் நினைவிடத்தில் குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் திரு. ஜக்தீப்தன்கர், பிரதமர் திரு. நரேந்திரமோடி, எதிர்கட்சித்தலைவர் திரு. ராகுல்காந்தி உள்ளிட்டோர் மலரஞ்சலி செலுத்தினர்.

அமைச்சர்கள் திரு. ராஜ்நாத் சிங், திரு. மனோகர் லால் கட்டார், முப்படை தலைவர்கள், ராணுவ தலைவர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

சர்வமத பிரார்த்தனைகளும் நடைபெற்றன.

பிரதமர் திரு. நரேந்திரமோடி வெளியிட்டுள்ள செய்தியில் மகாத்மா காந்தியின் கொள்கைகள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க உத்வேகம் அளிப்பதாகவும், நாட்டிற்காக இன்னுயிர் ஈந்த அனைவரையும் இந்நாளில் நினைவுகூர்வதாகவும் குறிப்பிட்டார்.

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் வெளியிட்டுள்ள செய்தியில் உண்மை, அஹிம்சை, தன்னலமற்ற சேவை போன்ற காந்தியடிகளின் கொள்கைகள் மக்களுக்கு வழிகாட்டுவதாக குறிப்பிட்டுள்ளார்.

சென்னை எழும்பூரில் மகாத்மா காந்தியடிகளின் திருவுருவப்படத்திற்கு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் மற்றும் மாநில அமைச்சர்கள் மலர்த்தூவி மரியாதை செலுத்தினர்.

பின்னர் தலைமை செயலகத்தில் முதலமைச்சர் தலைமையில் தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழியும் ஏற்கப்பட்டது.

**கன்னியாகுமரியில்** அமைந்துள்ள காந்தி நினைவு மண்டபத்தில் காந்தியடிகளின் திருவுருவ படத்திற்கு மாவட்ட நிர்வாகம் சார்பில் மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

**காந்தியடிகளின் நினைவுதினம், தியாகிகள்** தினமாகவும், தேசிய தொழுநோய் ஒழிப்பு தினமாகவும் இன்று கடைப்பிடிக்கப்படுகிறது.

**சிவகங்கை மாவட்டத்தில் தொழுநோய் ஒழிப்பு** தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணியை ஆட்சித்தலைவர் திருமதி. ஆஷாஅஜித் இன்று துவக்கிவைத்தார்.

**நாமக்கல் மாவட்டத்தில் தொழுநோய் ஒழிப்புத்திட்ட** பணிகள் முனைப்புடன் மேற்கொள்ளப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. **வாய்ஸ்** ..

**தர்மபுரி மாவட்டத்திலும் தொழுநோய்** ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் இன்று நடைபெறுகின்றன.

❖❖❖❖❖❖

**பட்ஜெட் கூட்டத்தொடர்**

**நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர்** குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு உரையுடன் **நாளை** தொடங்குகிறது.

இந்த ஆண்டின் முதல் கூட்டம் இது என்பதால் குடியரசு தலைவர் இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் நாளை உரை நிகழ்த்துகிறார்.

இதனிடையே பட்ஜெட் கூட்டத்தொடரை சுமூகமாக நடத்த ஏதுவாக மத்திய அரசு சார்பில் புதுதில்லியில் இன்று அனைத்து கட்சி கூட்டம் தொடங்கி நடைபெற்று வருகிறது.

அமைச்சர்கள் திரு. ராஜ்நாத் சிங், திரு. ஜே.பி.நட்டா, திரு. கிரண் ரிஜுஜு, காங்கிரஸ், திரிணமுல் காங்கிரஸ், சமாஜ்வாடி, பிஜு ஜனதாதள், திமுக கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதில் பங்கேற்றுள்ளனர்.

பட்ஜெட் கூட்டத்தொடரை சுமூகமாக நடத்த அனைத்து அரசியல் கட்சிகளும் உரிய ஒத்துழைப்பை வழங்கவேண்டுமென்று மத்திய அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

❖❖❖❖❖❖

**அஸ்வினி வைஷ்ணவ்**

**உள்நாட்டிலேயே செயற்கை நுண்ணறிவு** மாதிரிகளை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் வரும் மாதங்களில் மேற்கொள்ளப்படும் என்று மத்திய மின்னணு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு.அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செயற்கை நுண்ணறிவு இயக்கம் தொடர்பாக செய்தியாளர்களிடம் இன்று பேசிய அமைச்சர், இம்மாதிரிகள் உலகிலுள்ள மிகச்சிறந்த மாதிரிகளுடன் போட்டியிடும் திறன் வாய்ந்ததாக இருக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

இந்தியாவின் சொந்த செயற்கை நுண்ணறிவு மாதிரிக்கான கட்டமைப்பை உருவாக்க உத்தேச அழைப்புகள் விடுக்கப்பட உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

செயற்கை நுண்ணறிவு பாதுகாப்பு நிறுவனம் நம்நாட்டில் ஏற்படுத்தப்படும் என்று கூறியஅவர், AI தொழில்நுட்பத்தை முன்னெடுத்துச் செல்லும் வகையில் GPU எனப்படும் 15 ஆயிரம் Graphics செயலாக்க அதிநீவன பிரிவுகள் நம்மிடம் உள்ளதாக எடுத்துரைத்தார்.

Server இணையதள சேவையகங்களில் Deep Seek அதிநவீன தொழில்நுட்பம் விரைவில் ஏற்படுத்தப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அதிநவீன தொழில்நுட்பங்கள் நாட்டு மக்களுக்கு கிடைக்க வேண்டும் என்பதே பிரதமர் திரு. நரேந்திரமோடியின் விருப்பம் என்றும் திரு. அஸ்வினி வைஷ்ணவ் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖

**ஜெய்சங்கர்**

வளர்ச்சியடைந்த பாரத இலக்கை எட்ட நாட்டிலுள்ள இளையோரின் பங்களிப்பு மிக அவசியம் என்று மத்திய வெளியுறவு துறை அமைச்சர் டாக்டர் **S.**ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

டெல்லி பல்கலைக்கழகத்தில் வளர்ச்சியடைந்த பாரத இலக்கில் இளைஞர்கள் என்ற தலைப்பில் மாணவ மாணவிகளுடன் இன்று கலந்துரையாடிய அவர், விகசித் பாரத் இலக்கு இளைஞர்களின் பங்கில்லாமல் எட்ட முடியாது என்று குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖

**வக்ஃப் வாரியம்**

வக்ஃப் வாரிய சட்டத்திருத்த மசோதா தொடர்பான நாடாளுமன்ற கூட்டுக்குழுவின் அறிக்கை மக்களவை தலைவர் திரு. ஓம்பிர்லாவிடம் இக்குழு இன்று சமர்ப்பித்தது.

திரு. ஜெகதாம்பிகா பால் தலைமையிலான இக்குழுவினர் நாடாளுமன்ற வளாகத்தில் திரு. ஓம்பிர்லாவிடம் இந்த அறிக்கையை வழங்கியுள்ளனர்.

❖❖❖❖❖❖

**கிஷண்ரெட்டி**

**மத்திய சுரங்கத்துறை அமைச்சர் டாக்டர்** கிஷண்ரெட்டி மதுரை மாவட்டம். அ.வல்லாளப் பட்டியில் பொதுமக்களை இன்று நேரில் சந்தித்து பேசவுள்ளார்.

அரிட்டாப்பட்டி பகுதியில் டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதை கைவிடுவதாக மத்திய அரசு அறிவித்த நிலையில் மக்கள் பிரதிநிதிக்குழுவின் அழைப்பினை அடுத்து அமைச்சர் கிராம மக்களை இன்றுமாலை சந்திக்கிறார்.

❖❖❖❖❖❖

**கோ-ஆப்டெக்ஸ்**

**தமிழ்நாட்டில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவன ஊழியர்களுக்கு** 15 சதவிகிதம் வரை ஊதிய உயர்வு வழங்கி தமிழக அரசு இன்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதன்படி அலுவலக உதவியாளர் முதல் தலைமை பொது மேலாளர் வரை 10 நிலைகளில் பணியாற்றும் ஊழியர்கள் ஊதிய உயர்வு பெறுவார்கள்.

வீட்டு வாடகைப்படி மற்றும் நகர ஈட்டுப்படியும் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖

**மா.சுப்ரமணியன்**

முதுநிலை மருத்துவ படிப்பில் மாணாக்கர் சேர்க்கை தொடர்பாக தமிழக அரசு சார்பில் உச்சநீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்யப்படும் என்று மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வத்துறை அமைச்சர் திரு.மா.சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னை தலைமை செயலகத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு குறித்து சட்ட வல்லுநர்களுடன் ஆலோசனை நடத்தப்படும் என்றும் கூறினார்.

.. **வாய்ஸ்** ..

உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பால் இந்த ஆண்டில் முதுநிலை மருத்துவ மாணவர் சேர்க்கையில் பாதிப்பு இல்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖

**துரைமுருகன்**

**முல்லை பெரியாறு அணையின் உறுதித்தன்மை தொடர்பான** வழக்கை தமிழகஅரசு தொடர்ந்து மேற்கொள்ளும் என்று மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

வேலூர் மாவட்டம் காட்பாடியில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், தமிழகத்திற்கு தரவேண்டிய தண்ணீர் விஷயத்தில் மழைக்காலத்தில் திறந்துவிடப்படும் தண்ணீரையும் சேர்த்து கர்நாடகம் கணக்கு காட்டுவதாக கூறினார்

முன்னதாக காட்பாடி அருகே அரும்பருதி என்ற இடத்தில் அண்ணா கிராம மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட அங்கன்வாடி மையத்தை திறந்து வைத்து

பேசிய அமைச்சர், வேலூர் மாவட்ட வேளாண் பணிகளுக்கு முக்கியத்துவம் அளித்து நீர்வரத்து கால்வாய்கள் புதுப்பிக்கப்பட்டு வருவதாக குறிப்பிட்டார்

❖❖❖❖❖❖

**காவிரி மேலாண்மை**

**இதனிடையே காவிரி மேலாண்மை ஆணையத்தின் 37-வது** கூட்டம் அதன் தலைவர் திரு.எஸ்.கே.ஹல்தர் தலைமையில் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖

குரூப் - 2

**தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைத்தின்** குரூப்-2 முதன்மை தேர்விற்கான நுழைவுச்சீட்டுகள் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

tnpsc.gov.in மற்றும் tnpsc exams.in. இணைய தளங்களில் நுழைவுச்சீட்டுகளை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். முதன்மை தேர்வுகள் வரும் 8 மற்றும் 23 தேதிகளில் நடைபெறும்.

❖❖❖❖❖❖

**ஒலி மாசு**

**தமிழ்நாட்டில் ஒலி மாசுவை கட்டுப்படுத்துவதற்கான** நடவடிக்கைகளை மேற்கொள்ள அதிகாரிகளை மாநிலஅரசு நியமித்துள்ளது.

மாவட்ட ஆட்சித்தலைவர்கள், காவல் கண்காணிப்பாளர்கள், துணைகாவல் கண்காணிப்பாளர்கள் உள்ளிட்டோர் இந்நடவடிக்கைகளை கண்காணிக்க நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

நிர்ணயம் செய்யப்பட்ட அளவை விட ஒலி மாசு அதிகமாக இருப்பதாக புகார் வந்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், இரவு நேரங்களில் ஒலியை ஏற்படுத்தும் கட்டுமான கருவிகள் இயக்கக்கூடாது என்றும் அரசு அறிவுறுத்தியுள்ளது.

❖❖❖❖❖❖

**மீனவர்கள்**

**இலங்கை சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட** ராமேஸ்வரம் மீனவர்கள் 6 பேர் விமானம் மூலம் சென்னை வந்தடைந்தனர்.

தமிழக மீன்வளத்துறை அதிகாரிகள் இம்மீனவர்களை அரசுவாகனம் மூலம் சொந்த ஊர்களுக்கு அனுப்பிவைத்தனர்.

ராமேஸ்வரம் பகுதியை சேர்ந்த இம்மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி கடந்த 11-ம் தேதி இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டு அந்நாட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்த நிலையில் மத்திய அரசின் நடவடிக்கை காரணமாக சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டனர்.

❖❖❖❖❖❖

**இருவரி**

**திருச்சி மத்திய பேருந்து நிலையத்தில்** சாலை பாதுகாப்பு மாதத்தை ஒட்டி, கும்பகோணம் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தின் திருச்சி மண்டலம் சார்பில் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் பொதுமக்களுக்கு இன்று விநியோகிக்கப்பட்டன.

❖❖❖❖❖❖

**விபத்து**

**திருவண்ணாமலை மாவட்டம் செய்யாற்றை அடுத்த** மோரணம் ஏரிக்கரையில் எரிவாயு சிலிண்டரை ஏற்றிச்சென்ற லாரி கவிழ்ந்ததில் எரிவாயு சிலிண்டர்கள் ஆற்றில் விழுந்து தண்ணீரில் மிதப்பதை அடுத்து தீயணைப்பு துறையினர் மீட்பு பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖

**பேட்மிட்டன்**

**பேங்காக்கில் நடைபெறும் தாய்லாந்து மாஸ்டர்ஸ்** பேட்மிட்டன் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு இந்தியாவின் கிடாம்பி ஸ்ரீகாந்த்தும், சுப்ரமணியனும் முன்னேறியுள்ளனர்.

காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டங்களில் கிடாம்பி ஸ்ரீகாந்த் - ஹாங்காங்கின் ஜேசனை 21-19, 21-15 என்ற நேர் செட்களிலும்,

சுப்ரமணியன் - இந்தோனேஷியாவின் சிக்கோஹாராவை 9-21, 21-10, 21-17 என்ற செட்களிலும் வென்று காலிறுதிக்கு தகுதிபெற்றனர்.

❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**

❖❖❖❖❖❖